பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 06 செவ்வாய்க்கிழமை 20.05.2025 | அதிர்வு 290

## கெஹலியவுக்கு மறியல் நீடிப்பு!

### அவரின் மகளையும் சந்தேகநபராக பெயரிட்டது கொழும்பு நீதிமன்றம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லை

03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## வவுனியாவில் வைத்தியர் முகைதீன் கொலை: புளொட் நெடுமாறன் வழக்கிலிருந்து விடுவிப்பு!

### மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு



(கி.வசந்தன்)

வவுனியாவில் வைத்தியர் முகைதீனைச் சுட்டுப் படுகொலை செய்த சம்பவத்துடன் தொர்புடைய நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கிய நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்தத் தண்டனையை மாற்றி அவரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான சசி மகேந்திரன்,

03▶



# நாடாளுமன்றத்தில் கடும் வாக்குவாதம்

## ஆளும் தரப்பு – எதிரணி சொற்போரால் சபை நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கேள்வி எழுப்ப சபாநாயகர் அனுமதி மறுத்ததால் அரச தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் சபையில் இன்று கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சுமார் 20 நிமிடங்கள் வரை சபை நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாதாளக் குழுக்களின் செயற்பாடு மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் நிலையியற் கட்டளை 27/2 கீழ் எழுப்பிய கேள்விகளுக்குப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்தார்.

04▶

## செட்டிகுளத்தில் யானை தாக்கி ஒருவர் மரணம்



(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம், கன்னாட்டி – கணேசபுரம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

03▶

## வவுனியா சிறையில் சிறைக் காவலர்கள் யாழ். கைதி மீது மோசமான தாக்குதல்!



வவுனியா சிறைச்சாலையில் கைதி மீது சிறைக்காவலர்கள் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக கைதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சிறைக்காவலர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த கைதி யாழ்ப்பாணம், உடுவில் பகுதியை சேர்ந்த சிவபாலன் லக்சன் எனத் தெரியவருகின்றது.

படுகாயமடைந்த சிறைக் கைதி வவுனியா பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த 15ஆம் தகதி தொடக்கம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்

03▶



# மஹிந்த, கோட்டா தலைமையில் இன்று போர் வீரர்கள் தின நிகழ்வு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஏற்பாட்டில் போர் வீரர்கள் நினைவு தின நிகழ்வு நாடாளுமன்ற மைதானத்துக்கு அருகே அமைந்துள்ள போர் வீரர் நினைவுச் சின்னத்துக்கு அருகில் இன்று காலை நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பிற கட்சி உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,

“இன்று நாங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்தோம். ஆம், சமாதானத்துக்காகவே யுத்தம் செய்தோம்.

யாரையும் பிடிப்பதற்காக அல்ல. நாட்டைப் பாதுகாப்பதற்காகவே யுத்தம் செய்தோம்.

எதிர்காலத்தில் இவை மீண்டும் நடைபெறுமா? இல்லையா? என்பதைச் சொல்ல முடியாது. அது வரும் அரசுகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

யுத்தம் என்பது ஒரு துயரச் சம்பவம். ஆனால், எங்கள் இராணுவம் வெற்றி பெற்றது. யுத்தத்தில் ஒரு தரப்பு வெற்றி பெற வேண்டும் தானே.” – என்றார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி இதன்போது எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த, “தேசிய பாதுகாப்பு? அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டைப் பாதுகாக்க வேண்டும்” – என்றார்.

















# பெண்ணின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் கோரிக்கை

(கி.வசந்தன்)

வவுனியா, மூன்றுமுறிப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி இரவு வவுனியா, மூன்று முறிப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.



மேற்படி பெண்ணின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் இதுவரை பொலிஸாரால் அடையாளம் காணப்படவில்லை.

எனவே, அவரது உறவினர்கள் யாரேனும் இருந்தால் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

### 120 மில்லியன் ரூபா மதிப்புள்ள குஷ் போதைப் பொருளுடன்

# தாய்லாந்திலிருந்து வருகை தந்திருந்த மூன்று பெண்கள் கட்டுநாயக்காவில் கைது

தாய்லாந்திலிருந்து வருகை தந்த இலங்கையைச் சேர்ந்த மூன்று பெண்கள் இன்று (20) கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கொண்டு வந்த மின்சார சாதனங்களில் வைத்து 120 மில்லியன் ரூபா மதிப்புள்ள குஷ் போதைப் பொருளை கடத்த முயன்ற நிலையிலேயே கைது செய்யப்பட்டனர்.

பண்டாரநாயக்க வருகை முனையத்தில் உள்ள சுங்க அதிகாரிகள், பயணிகளின் உடமைகளை சோதனை செய்தனர். இதன்போது வீட்டு மின் பொருள்களுக்குள் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருளை கண்டுள்ளனர்.

இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட குஷ் போதைப்பொருள் 12 கிலோ எனவும் இலங்கையில் ஒரு கிராம் குஷ் விலை 10 ஆயிரம் ரூபா எனவும் சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வவுனியாவில்...**

அமல் ரணராஜா ஆகியோர் அடங்கிய அமர்விலேயே இந்தத் தீர்ப்பை இன்று அறிவித்தது. இது தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆகியோரின் வாதங்களை ஏற்ற நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அறிவித்தது.

வவுனியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியரான சுல்தான் முகைதீன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் குற்றவாளியாகச் சந்தேகிக்கப்பட்ட அன்றைய புளொட் உறுப்பினரான நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவர் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி அப்போதைய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியான மா.இளஞ்செழியன் நெடுமாறன் என்பவரைக் குற்றவாளியாகக் கண்டு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், இந்தத் தீர்ப்புக்கு எதிராக கௌரி சங்கரி சட்ட நிறுவனம் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது. மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் முடிவடைந்த நிலையில் இன்று தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டிருந்தது.

அந்தவகையில், குற்றவாளிக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றிய மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுதாரரை வழக்கில் இருந்து முழுமையாக விடுவித்து தீர்ப்பளித்தது.

குறித்த மேன்முறையீட்டு வழக்கில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் ஆலோசனையின் பிரகாரம் சட்டத்தரணிகளான அன்டன் துரைசிங்கம் ஜெயாநந்தன், ஹப்பு ஆராச்சி ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.வி.தவராசா, அனில் சில்வா ஆகியோரும் ஆஜராகினர். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அசாத் நவாவி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**செட்டிகுளத்தில்...**

நேற்று இரவு அவரின் வீட்டில் இருந்து அருகில் உள்ள கடைக்குச் சென்ற போது வீதிக்கரையில் நின்ற காட்டு யானை அவரைத் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் கன்னாட்டி – கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய பா.சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பறையனாலங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**வவுனியா சிறையில்...**

என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட சிறைக் கைதியின் உறவினர்களால் நேற்று (19) வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட கைதியின் உறவினர்கள், “இந்தச் சம்பவம் பற்றி தகவல் வெளியிடும் பட்சத்தில் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனச் சிறைக்காவலர்களால் கைதிக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.” – என்று தெரிவித்தனர்.

**கெஹலியவுக்கு...**

எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல இன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களைப் பரிசீலித்த நீதிவான் இந்த வழக்கின், மற்றுமொரு சந்தேகநபராக கெஹலிய ரம்புக்வெலவின் மகனான ரமித் ரம்புக்வெலவின் பெயரைக் குறிப்பிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காகக் கடந்த 7ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியபோது ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சட்டவிரோத மணலுடன் தப்பியோடிய டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் சட்டவிரோத மணலுடன் தப்பியோடிய டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை ஒரு மணியளவில் வரணி – மந்துவில் வீதியில் இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பளைப் பகுதியிலிருந்து சட்டவிரோத மணலுடன் சென்ற டிப்பர் வாகனத்தை எழுதுமட்டுவாள் பகுதியில் கடமையில் இருந்த கொடிகாமம் பொலிஸார் நிறுத்த முயற்சித்தபோது குறித்த டிப்பர் வாகனம் நிறுத்தாது கொடிகாமம் பகுதியை நோக்கித் தப்பியோடியது.

இதையடுத்து பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் கொடிகாமம் பகுதியிலும் டிப்பர் வாகனத்தை நிறுத்தப் பொலிஸார் முயற்சித்தனர். எனினும், டிப்பர் வாகனம் நிறுத்தாது வரணியை நோக்கித் தப்பியோடியது

இதையடுத்து பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தைத் தமது வாகனத்தில் துரத்திச் சென்றனர். இந்தநிலையில் டிப்பர் வாகனம் வரணி – மந்துவில் வீதியால் திரும்பிச் சென்று வேம்பிராய் நோக்கி மிக வேகமாகத் தப்பியோடியது.

இதன்போது டிப்பரில் இருந்தவர்கள் பொலிஸாரின் வாகனத்தை நோக்கி டார்ச் லைற் மூலம் பிரகாசமான ஒளியைப் பாய்ச்சினர்.

இதனால் தமது வாகனத்தைச் செலுத்த முடியாத நிலையில் பொலிஸார் டிப்பர் வாகனத்தின் ரயர்களை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

துப்பாக்கி வேட்டுக்கள் டிப்பர் வாகனத்தின் ரயரை வெடிக்கச் செய்ததுடன் எரிபொருள் தாங்கி மீதும் துளையிட்டது.

இதையடுத்து குறித்த டிப்பர் வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதி உட்பட இரண்டு சந்தேகநபர்கள் தப்பியோடினர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மணலுடன் சென்ற டிப்பர் வாகனத்தைக் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**நாடாளுமன்றத்தில்...**

இதனையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. தயாசிறி ஜயசேகர ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, மேலும் சில கேள்விகளை எழுப்பியதுடன் சில குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த ஆளும் தரப்பு எம்.பி. கௌஷல்யா ஆரியரத்ன, "தயாசிறி எம்.பி. எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை நிலையியற் கட்டளைக்கு முரணானது. சபையை அவர் தவறாக வழிநடத்தி இருக்கின்றார்." – என்று தெரிவித்தார்.

இதன்போது தயாசிறி எம்.பி. அதற்குப் பதிலளிக்க முற்பட்டபோது சபாநாயகர் அனுமதியளிக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் தயாசிறி எம்.பி., கௌஷல்யா எம்.பியைப் பார்த்து ஏதோ தெரிவித்தார். அதன்போது அவரின் ஒலிவாங்கி முடக்கப்பட்டிருந்தது.


இதன்போது எழுந்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடும் தொனியில் தர்க்கத்தில் ஈடுபட்டார். ஜனாதிபதி நிதியத்தின் கொள்ளையடித்தவர், ஏழைகளின் பணத்தைச் சூறையாடியவர் என்றவாறாக கடும் ஆவேசமாகத் தயாசிறி எம்.பியைப் பார்த்துத் தெரிவித்தார்.

சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, அமைச்சர் வசந்த சமரசிங்க உள்ளிட்டோருடன் இன்னும் சில அரச தரப்பினரும் எதிர்க்கட்சியினருக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்தனர். அரச தரப்பினர் தமது கருத்துக்களை ஒழுங்குப் பிரச்சினை என்ற அடிப்படையில் முன்வைக்க அனுமதித்த சபாநாயகர் எதிர்க்கட்சியினருக்கு நேரம் வழங்க மறுத்து விட்டார். இதனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எம்.பி . சிவஞானம் சிறீதரனுக்கு விசேட கூற்று முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டபோதும், அவர் உரையாற்ற முடியாதளவுக்கு சபை அமளிதுமளிபட்டுக் கொண்டிருந்தது. சிறீதரன் எம்.பி. தனது கருத்துக்களை முன்வைக்கப் பல தடவைகள் முயன்றபோதும் அது முடியவில்லை.

இந்நிலையில், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய அர்ச்சுனா எம்.பி., "நான் 20 செக்கன்கள் இடையில் உரையாற்றியபோது என்னைச் சபையில் இருந்து வெளியில் அனுப்பினீர்கள். ஆனால், தற்போது இவ்வளவு பேர் கூச்சலிட்டுக் கொண்டிக்கும்போது அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களே?" – என்று ஆவேசமாகத் தெரிவித்தார்.

இவ்வாறாக சபை நடவடிக்கைகள் சுமார் 20 நிமிடங்கள் வரை கடும் அமளிதுமளிக்கு மத்தியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், இறுதியில் அனைவரும் அமைதியாகினர்.



# அமெரிக்கா, சுவிஸ் நாடுகளின் தூதுவர்களை நேரில் சந்தித்த தமிழ்த் தேசியப் பேரவையினர்

## தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர் அமெரிக்கா, சுவிஸ் நாடுகளின் தூதுவர்களுடன் இன்று செவ்வாய்க்கிழமை அந்தந்தத் தூதரங்களில் சந்திப்பு நடத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிரேஷ்ட சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோர் அமெரிக்கத் தூதரகத்தில் அந்த நாட்டுத் தூதுவரைச் சந்தித்தனர்.

இதன்போது அவர்கள், தமிழ் மக்களுக்குச் சமஷ்டி அடிப்படையிலான நிரந்தர தீர்வு வேண்டும், வடக்கில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பை அரசு நிறுத்த வேண்டும் எனப் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்பின்னர் மேற்படி குழுவினர் சுவிஸ் நாட்டுத் தூதுவரைச் சந்தித்துத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்தனர்.





# தேசிய பாதுகாப்பின் வீழ்ச்சி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்துரையாடல்

## சபாநாயகரையும் நேரில் சந்தித்துப் பேச்சு

நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் தேசிய பாதுகாப்பின் வீழ்ச்சி குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையிலான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கயந்த கருணாதிலக, சிவஞானம் சிறீதரன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், கே.காதர் மஸ்தான், திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ஜே.சி. அலவத்துவல, கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, வைத்தியர் ப.சத்தியலிங்கம், நிஸாம் காரியப்பர் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச் சூழ்நிலையில் நாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொதுச் சேவையை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என்று கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக மீண்டும் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக காலையில் சபாநாயகரைச் சந்திக்க எதிர்க்கட்சிக் கட்சித் தலைவர்கள் முடிவு செய்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பணிகளை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் மேற்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்கும் பொறுப்பும் கடமையும் சபாநாயகருக்கு உள்ளதை வலியுறுத்த வேண்டும் என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

எழுந்துள்ள நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்குப் பொலிஸ்மா அதிபரையும், பிரபுக்கள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரையும் உடனடியாக நாடாளுமன்றத்துக்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோர வேண்டும் என கட்சித் தலைவர்கள் முடிவு செய்தனர். அதன்படி சபாநாயகரைச் சந்தித்த கட்சித் தலைவர்கள் குறித்த முடிவுகள் மற்றும் யோசனைகள் குறித்து சபாநாயகருக்குத் தெரிவித்தனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வெறும் பகல் கனவு

போர் முடிவடைந்தும் கூட நாடு முழுமையாக விடுவிக்கப்படவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசியப் போர்வீரர் நினைவேந்தல் நிகழ்வில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உண்மைதான். குண்டு வெடிப்பு அதிர்வுகள், பீரங்கி முழக்கங்கள், துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் இப்போது இல்லை. அவை ஓய்ந்து விட்டன. யுத்தப் பேரழிவுகளும் நாசகாரப் போரழிவுகளும் இல்லைத்தான். ஆனால், நாட்டில் உண்மையான அமைதியும், நிலையான சமாதானமும், நீடித்த நல்லிணக்கமும் ஏற்படவேயில்லை. அவை கானல் நீராகத் தள்ளித் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கின்றன.

நாட்டில் முழுமையான வெற்றியாளர்கள் இல்லை என்றும், நாட்டில் சட்டம் - ஒழுங்கை முழுமையாக நிலைநாட்டுவதன் மூலம் மட்டுமே முழுமையான வெற்றிகளை அடைய முடியும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான் வெற்றிக்கு அவர் கூறும் மார்க்கம் கூட உண்மையானது அல்ல. நாட்டில் சட்டம் - ஒழுங்கை முழுமையாக நிலைநாட்டினால் நாடு வெற்றி கொண்டநாடாகிவிடும் என்று அவர் கூறுவது வெறும் அபத்தக் கருத்தன்றி வேறில்லை.

இலங்கையில் யுத்தத்தின் பெயரால் ஓரினம் திட்டமிட்டு, இலக்கு வைத்து அழிக்கப்பட்டிருக்கிறது. இனப்படுகொலை அரங்கேறி இருக்கிறது. யுத்தக் குற்றங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுருக்கின்றன. மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் நீதி செய்வதுதான் - பொறுப்புக் கூறுவதுதான் - உண்மைகளை கண்டறிவதுதான் - குற்றம் இழைத்தவர்களை உரிய முறையில் தண்டிப்பதுதான் - நாட்டில் சட்டமும், ஒழுங்கும் முழுமையாக நிலைநாட்டப்படும் விவகாரமாக இருக்க முடியும். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிடுகின்ற சட்டம்,ஒழுங்கு நிலைநாட்டல் அதுவல்ல.

யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இழுபடுகின்ற காலம் எல்லாமுமே அந்த யுத்தக் குற்றங்கள் தொடர்கின்றன என்றே அர்த்தம். அந்த வகையில்பார்த்தால்யுத்தம்முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர் கடந்த 16 ஆண்டுகளாக அந்த யுத்தக் குற்றத் தவறு தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த வரலாற்றுத் தவறு திருத்தப்படாமல் இந்த இலங்கை தீவில் நிலையான சமாதானமும், நீடித்த அமைதியும், உறுதியான நல்லிணக்கமும் சாத்தியப்படப் போவதில்லை என்பது திண்ணம்.

நேற்று மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, “நாங்கள் போதுமான அளவு இரத்தம் சிந்தியுள்ளோம். பூமி நனையும் வரை இரத்தம் சிந்திய தேசம். ஆறுகள் இரத்தத்தால் ஓடும் வரை இரத்தம் சிந்திய தேசம் நாங்கள். போரின் மிகக் கொடூரமான வலிகளையும் துன்பங்களையும் அனுபவித்த மக்கள் நாங்கள். அவை அனுபவங்களாக இருந்தால், அத்தகைய சூழ்நிலை மீண்டும் நிகழாமல் தடுக்க வேண்டும். நாம் முழுமையான வெற்றியாளர்கள் அல்ல. இந்த நாட்டில் அமைதியை உருவாக்குவதன் மூலம் மட்டுமே நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற முடியும்.” - என்றும் கூறினார்.

யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட பெரும் அநீதிகளை - அட்டூழியங்களை - அடாவடித்தனங்களை - அட்டகாசங்களை - கொடூரங்களை - மூடி மறைத்துக் கொண்டு, அந்த ஈனத்தனமான வெறிச் செயல்களைப் புரிந்தோரைக் காபந்து பண்ணி, யுத்த வெற்றி வீரர்களாக போற்றிக் கொண்டு உண்மையான - நீடித்த - நிலையான சமாதானத்தையும் அமைதியையும் அடைவது என்பது வெறும் பகல் கனவாகவே இருக்கும்.

# ஆஸ்திரேலியா குயின்ஸ்லாந்தில் தமிழ் இலக்கிய விருது விழா!

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் தமிழ் விருது விழா நடைபெறவுள்ளது.

தமிழ் இலக்கியத் தோட்டம் நடத்தும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 க்குக் கிரேன்ஜ் சமூக மண்டபம், 187 வில்ஸ்டன் சாலை, நியூமார்க்கெட், குயின்ஸ்லாந்து 4051 எனும் முக வரியில் நடைபெறவுள்ளது.




ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர், மூதறிஞர், கலாபூசணம், கலைமாமணி, தமிழ்மணி அகளங்கனுக்கும், தமிழ் நாட்டு தமிழறிஞர், நாவலர், எழுச்சிக் கவிஞர் எ.இரவிச்சந்திரனுக்கும் (கதிர் மதியன்) விருதுகள் வழங்கப்படவுள் ளன.

நீண்டகாலமாகத் தமிழ் இலக்கியத் துறையில் தொடர்ந்து பணியாற்றி வரும் அவர்களின் இலக்கிய பொன் விழா நிறைவை முன்னிட்டு மாபெரும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் நடைபெறவுள்ளன.

பல இலக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டு இவ்விரு இலக்கிய அறிஞர்களின் தமிழ் இலக்கியத் துறையில் ஆற்றிய சாதனைகளை எடுத்தியம்பி அவர்களைக் கௌரவிப்பதுடன் பல மேடை நிகழ்ச்சிகளும் அரங் கேறவுள்ளன.

# சிறுவர்களது பாதுகாப்பு தொடர்பில் மட்டக்களப்பில் கலந்துரையாடல்!





(அபு அலா, மட்டு. துஷாரா, த.ஜெபி ஜனார்த் )

சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான யுனிசெவ் பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் தலைவி ரியோனா உள்ளிட்ட யுனிசெவ் நிறுவனத்தின் உயரதிகாரிகள், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைத்தரத்தை மேம்படுத்தல், ஒட்டுமொத்த குழந்தை பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தல், மாவட்டத்தில் பாதிக்கப்படும் சிறுவர் சிறுமிகளை பாதுகாப்பதில் அரச உத்தியோகத்தர்களின் வகிபாகம், அதனை நடைமுறைப்படுத்தும் அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல், சிறுவர் துஷ்பிரயோகம், தற்கொலை முயற்சிகளை முறியடித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்தில் பாதிக்கப்படும் சிறுவர், சிறுமிகளை பாதுகாப்பதில் கையாள வேண்டிய விடயங்கள், சிறுவர் நேய அலுவலகங்களாக மாற வேண்டிய அலுவலகங்கள் தொடர்பாகவும் மாவட்ட அரச அதிபரால் இதன்போது ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

# கடும் மழையால் புத்தளத்தில் உப்பு உற்பத்தி பெரும் பாதிப்பு



**(கற்பிட்டி எம். எச்.எம். சியாஜ்)**

சீரற்ற காலநிலையால் பெய்த கடும் மழையால் சுமார் 15 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உப்பு அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது என்று புத்தளம் மாவட்ட உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் நிலவிவரும் கடுமையான உப்பு பற்றாக் குறைக்கு, உப்பு உற்பத்திக்கு தேவையான சூரிய ஒளி போதியளவு கிடைக்காததும், தொடர்ச்சியாக மழை பெய்வதும் இதற்கு காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் மொத்த உப்பு உற்பத்தியில் புத்தளம் மாவட்டம் சுமார் 60 சதவீதம் பங்களிப்பை வழங்கி வருவதுடன், வெயில் காலங்களில் சுமார் 100,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான உப்பு அறுவடை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தனியார் மற்றும் அரச உப்பு உற்பத்தியாளர்களின் தொடர்புடைய துறைகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், புத்தளம் மாவட்டத்தில், சிறுபோக பருவத்தில் உப்பு அதிக அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில், கடும் மழை காரணமாக, புத்தளத்தில் உப்பு அறுவடை மீண்டும் தோல்வியடைந்துள்ளது என்று உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், தாம் பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் , அதிக கடன் சுமைகளோடு தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்றனர் என்றும் புத்தளம் உப்பு உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





# குழந்தைகளின் ஆரோக்கிய மேம்பாட்டுக்கு தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்க நடவடிக்கை!

(றியாஸ் ஆதம்)

தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உணர்த்தி, தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில் துறைசார்ந்த கள உத்தியோகத்தர்களுக்காக பிராந்திய தாய் சேய் நலன் பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிச் செயலமர்வு ஒன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார தாதிய சகோதரிகள், மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.என். றொஷான்ந், பிராந்திய தாய்சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு, தாய்ப்பாலின் மகத்துவம், தாய்ப்பாலால் ஏற்படும் உடல், உள மற்றும் ஆத்மீக நன்மைகள் தொடர்பாகவும் விரிவுரையாற்றினர்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு மற்றும் தரவுகளின் அடிப்படையில் குழந்தை பிறந்து 6 மாதங்கள் தொடர்ச்சியாக தாய்ப்பாலூட்டும் செயற்பாடுகள் குறைவ



டைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் துறைசார்ந்த கள உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்துத் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிப்பதே இந்தப் பயிற்சிச் செயலமர்வின் நோக்கமாகும்.







# மட்டு.வில் சுகாதார அமைச்சால் டெங்கு ஒழிப்பு பரிசோதனைகள்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையை அடுத்து சுகாதார அமைச்சால் டெங்கு ஒழிப்புப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை (20) மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடன் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் ஆர். முரளீஸ்வரனின் வழிகாட்டலின் கீழ் செயல் திட்டம் மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட வெட்டுக்காடு சுகாதாரப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது மாவட்ட தொற்று நோய்கள் பிரிவின் வைத்திய அதிகாரி எஸ். உதயகுமார் தலைமையில் வீடுகள், வடிகான்கள், பொது இடங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

டெங்கு குடம்பிகள் இனங் காணப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதரர்கள், சுற்றாடல் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள், விமானப்படையினர் என பலர் கலந்து கொண்டனர்.

# போதைப் பொருளுக்கு அடிமையானோருக்கு கிழக்கு மாகாணத்தில் சிகிச்சை நிலையம்!

## ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல்





(ஹஸ்பர் ஏ.எச்.)

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் குழுக் கூட்டமானது நேற்று (19) திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களுக்காக சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடலாக இது அமைந்துள்ளது.

இதன்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் கே.கே.எஸ்.கொத்தலாவல, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு பணிப்பாளர் யு.ஜி. சாந்த கமகே, நிர்வாகப் பணிப்பாளர் எம்.டி.எஸ். ஹேமச்சந்திரா, உதவி பணிப்பாளர் நிலானி அலுத்கே மற்றும் துறைசார்ந்த பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# 2025 இல் 944 விபத்துகள்; 1007 பேர்வரை உயிரிழப்பு!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

2025 ஆம் ஆண்டில் இதுவரை இடம்பெற்ற 944 விபத்துகளில் 1007 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஊடக வியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித் துள்ளார்.

அத்துடன் 2025 ஜனவரி 1 முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் ஓட்டிய 26 ஆயிரத்து 413 பேர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.






# கடற்கொள்ளையில் ஈடுபடுபவர்களின் சொத்துக்களை அரச உடமையாக்குக!

## மீனவ பிரதிநிதிகள் கோரிக்கை





(பாறுக் ஷிஹான்)

தேத்தாதீவு பிரதேசத்தை சேர்ந்த சிலரது தலைமையில் கடற்கொள்ளையர்கள் செயற்படுகின்றனர். அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரச உடமையாக்க வேண்டும். இந்தச் சட்டவிரோத செயற்பாட்டுக்குக் காரணமான அரச அதிகாரிகள் பாதுகாப்பு படையினர் மீது உடடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவ பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

கிழக்கு மாகாணத்தின் மட்டு. - அம்பாறை மாவட்ட மீனவர்களின் உடைமைகளையும் வாழ்வாதாரத்தையும் கடற்கொள்ளையில் ஈடுபடுபவர்களிடம் இருந்து பாதுகாப்பது தொடர்பிலான கலந்துரையாடல் மாளிகைக்காடு தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர்கள் அரச உயர் அதிகாரிகள் முன்னிலையில் இந்த கோரிக்கையை முன்வைத்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் நெறிப்படுத்தலில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். ஜெகராஜன், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மீன்பிடித்திணைக்கள உயர் அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ நிலைய உயர் அதிகாரிகள், கல்முனை காரைதீவு, சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள், கல்முனை மாநகர ஆணையாளர் உட்பட விசேட அதிரடிப்படையினர், பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள், மீனவ சங்க பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் சங்க பிரதிநிதிகள், மீனவர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

இதன்போது, ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களைக் கடலில் வைத்தே திருடும் கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பணி மந்தகதியில் நடக்கிறது. பாதுகாப்பு படையினரும் இந்த ஈனச்செயலுக்கு உடந்தையாக இருக்கின்றனர். ஆழ்கடலில் இயற்கையுடன் போராடி அன்றாட வாழ்வாதரத்தை கொண்டு செல்ல மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டை இனியும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த மீனவர்கள் உடனாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை கோரினர்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி, மீன்பிடி அமைச்சர் போன்றோருக்கு இந்தப் பிரச்சினைகளைத் தெரிவித்து, தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன். மீனவர்களின் பிரச்சினைக்கு ஜனாதிபதியிடம் விளங்கப்படுத்தி தீர்வை பெற்றுத்தருவேன். மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்க ஆர்ப்பாட்டம் செய்வதை விட அரச தலைவர்களுக்கு பிரச்சினையைத் தெரிவிப்பதே சிறந்த தீர்வு.

மீனவனின் பிள்ளையான எனக்கு மீனவர்களின் பிரச்சினையை பற்றி யாரும் விளங்கப்படுத்த தேவையில்லை. மீனவர்களுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை. நான் பல வருடங்களாக பல்வேறு தரப்பினர்களையும் அணுகி மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க பல்வேறு முயற்சிகளை செய்து கொண்டு தான் இருக்கிறேன்.- என்றார்.

சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் இலகுவாக தப்பிவிட முடியாது. இலங்கை கடற்படை, விசேட அதிரடி படை, பொலிஸாரின் கூட்டு முயற்சியில் இந்த திருட்டு நடவடிக்கைகளை ஒழிக்க விசேட திட்டத்தை செயற்படுத்தி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தர உறுதியளிப்பதாக பலரும் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் அவை நடந்த பாடில்லை. நாடாளுமன்றத்திலும் கடந்த காலங்களில் எங்களின் பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளது. நாங்களும் கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் எனப் பலரிடமும் பேசியும், கலந்துரையாடியும் எவ்வித ஆக்க பூர்வமான தீர்வும் கிட்டவில்லை என்றும் இதன்போது மீனவர்கள் தெரிவித்தனர்.



# 9 மாணவரை முழங்காலில் நிற்கவிட்டு தாக்கியுள்ளார் பாடசாலை அதிபர்!

## அம்பாறையில் சம்பவம்; பல தரப்பினரிடமும் முறைப்பாடு!!

(பாறுக் ஷிஹான்)

9 மாணவர்கள் முழங்காலில் நிற்கவிட்டுத் தாக்கிய சம்பவம் ஒன்று அம்பாறை நகர அரச பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் ஒன்பது மாணவர்களை பாடசாலை அதிபரான பௌத்த துறவி ஒருவர் கொடூரமாகத் தாக்கியுள்ளார் என்று பெற்றோர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி அன்று பாடசாலை நேரத்துக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புகள் நடைபெற்றன. இதன்போது அன்றைய தினம் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட இடைவேளையின் போது கழிப்பறைக்குச் சென்ற பல குழந்தைகள் தண்ணீர் விசிறி சிறு விளையாட்டில் ஈடுபட்டனர் என்று வகுப்பு ஆசிரியரால் பாடசாலை அதிபருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய மறுநாள் (16) பிற்பகல் சுமார் 3 மணியளவில் பாடசாலை அதிபர் தனது கையில் மூன்று பிரம்புகளை எடுத்து, ஒன்பது குழந்தைகளையும் வரவழைத்து முழங்காலில் நிற்க வைத்து, அவர்களின் கைகளை சுவரில் வைத்து பிரம்புகள் உடையும் அளவுக்கு பிள்ளைகளின் முதுகில் கொடூரமாக அடித்துள்ளார்.



பின்னர் வீடு திரும்பிய பாதிக்கப்பட்ட பிள்ளைகள் நடந்த சம்பவத்தை பெற்றோரிடம் தெரிவித்தனர்.


இந்த சம்பவம் தொடர்பாக பெற்றோர்கள் கல்வி அலுவலகத்தில் முறைப்பாடு மேற்கொள்ள தயாராகி போது, அந்தப் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் குழு, பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அழுத்தம் கொடுத்தது.

எனினும் சிறுவர் மறுவாழ்வு மையம், அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் இந்த பிள்ளைகள் மீதான தாக்குதல்கள் குறித்து எழுத்து மூலமான முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் உடனடியாக விசாரணையைத் தொடங்குவார் என்றும் தெரிவித்துள்ளார்.



# நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு உறுப்பினராக நிசாம் காரியப்பர்!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

விஞ்ஞானம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு உறுப்பினராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் இன்று (20) செவ்வாய்க்கிழமை சபை அமர்வின் போது வெளியிட்டார்.





# சம்மாந்துறை மல்வத்தை பகுதியில் கசிப்பு உற்பத்திப் பொருள்கள் மீட்பு!

(பாறுக் ஷிஹான்)

ஒரு தொகுதி கசிப்பு உற்பத்திப் பொருள்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று திங்கட்கிழமை (19) அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை பகுதியில் உள்ள வயல் வெளியில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமே இவ்வாறு முற்றுகை இடப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது மல்வத்தை பகுதி ஆற்றங்கரை அருகில் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்தி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை பொருள்களை மீட்ட பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவினர் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பொருள்களில் 2 பரல் கோடா, பழ வகைகள், கொள்கலன்கள் என்பன உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்கள் யாவும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்குச் சட்ட நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் வழிகாட்டலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழு குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# வாசனைத் திரவியங்களுடன் கண்ணாடி இழைப்படகு மீட்பு!

தமிழக கடற்பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 320 கிலோ சுக்கு மற்றும் 150 கிலோ ஏலக்காய் என்பவற்றை, இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர். இதன்போது கண்ணாடி இழைப்படகு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் கண்காணிப்புப் பணியின்போது சந்தேகத்துக்கு உரிய முறையில் புத்தளம்- கல்பிட்டி கரை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு படகை நேற்று அதிகாலை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, 12 மூடைகளில் 320 கிலோ சுக்கு மற்றும் 150 கிலோ ஏலக்காய் இருந்ததை அவர்கள் கண்டுள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட சுக்கு மற்றும் ஏலக்காய் என்பன சுங்கத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த 11 பேர் இந்தியாவில் கைது

பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாக பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களில் யூடியூபர் முதல் மாணவர் வரை 11 பேரை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தியாவில் நாசவேலைகளை அரங்கேற்ற எல்லையில் தீவிரவாதிகளை பாகிஸ்தான் இராணுவம் ஊடுருவச் செய்கிறது. மேலும் இந்தியாவில் பணத்துக்காக விலைபோகின்றவர்கள் மூலம் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பெற்று சதி வேலையில் ஈடுபடுகிறது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் இந்தியாவில் பாகிஸ்தானின் உளவு வலையமைப்பை தகர்க்கும் நடவடிக்கையில் இந்திய அதிகாரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இதில் பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தரப்பிரதேசத்தில் 11 பேரை அதிகாரிகள் சமீபத்தில் கைது செய்துள்ளனர். அவர்களைப் பற்றிய விவரம் வெளியாகியுள்ளது.

**ஜோதி மல்ஹோத்ரா:**

இவர், ஹரியானா மாநிலம் ஹிசார் நகரை சேர்ந்த 33 வயது யூடியூபர். 'டிராவல் வித் ஜே.ஓ' என்ற யூடியூப் சனலை நடத்தி வருகிறார். பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய டேனிஷ் என்ற அதிகாரியுடன் இவருக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது. மேலும் டி ல்லியில் அசன்-உர்-ரஹிம் பாகிஸ்தான் அதிகாரியை சந்தித்துள்ளார். கடந்த 2004 இல் இவர் 2 முறை பாகிஸ்தான் சென்று இரகசிய தகவல்களை பகிர்ந்துகொண்டுள்ளார்.

**தேவேந்திர சிங் தில்லான் (வயது 25):**



இவர், பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் உள்ள கல்சா கல்லூரியின் எம்.ஏ (அரசியல் அறிவியல்) முதலாமாண்டு மாணவர்.

சிறிது காலத்துக்கு முன்பு ஐ.எஸ். உடன் இவருக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது. இதன் பிறகு இந்தியாவுக்கு எதிராக உளவு நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினார். இவர் கடந்த 12 ஆம் திகதி ஹரியானாவில் கைது செய்யப்பட்டார். இவர் கடந்த 2004 இல் பாகிஸ்தான் எல்லையில் உள்ள கர்தாபூர் சாகிப் சென்றுள்ளார். அப்போது ஐ.எஸ்.அதிகாரிகளிடம் பாட்டியாலா இராணுவ முக்கிய தகவல்களை பகிர்ந்து கொண்டதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

**முகம்மது டாரிப்:**

இவர், ஹரியானாவின் நூ மாவட்டம் கங்கர்கா கிராமத்தை சேர்ந்தவர். இவர் சிர்சா விமானப் படை தளம் உட்பட பாகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து பாகிஸ்தானுடன் பகிர்ந்து வந்துள்ளார்.

**அர்மான் (வயது 25):**

இவர், ஹரியானாவின் நூ மாவட்டத்தில் 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் உச்சத்தில் இருந்தபோது முக்கிய தகவல்களை இவர் பகிர்ந்து கொண்டார் என இவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

**நவுமான் இலாகி:**

ஹரியானாவில் காவலாளியாக பணியாற்றி வந்த இவர் பானிபட் நகரில் சில நாள்களுக்கு முன் கைது செய்யப்பட்டார். உத்தர பிரதேசத்தை சேர்ந்த இவர் பாகிஸ்தானில் உள்ள ஐ.எஸ். உறுப்பினர்களுடன் தொடர்பில் இருந்துள்ளார். உளவுத் தகவல்களுக்கு பாகிஸ்தானில் இருந்து தனது மைத்துனரின் வங்கிக் கணக்கில் பணம் பெற்று வந்துள்ளார்.

**ஷாஜாத்:**

உத்தர பிரதேசம் ராம்பூரில் சொந்த தொழில்நடத்தி வருபவர் ஷாஜாத், மொராதாபாத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார். இவர் பலமுறை பாகிஸ்தான் சென்று வந்துள்ளார். தேசப் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொண்டுள்ளார். மேலும் அங்கிருந்து அழகு சாதனப் பொருள்கள், துணிகள் மற்றும் மசாலாப் பொருள்களை கடத்தி வந்துள்ளார்.

**முகம்மது முர்தாசா அலி:**

ஜலந்தரில் நடந்த சோதனையில் இவர் கைது செய்யப்பட்டார். இவரே உருவாக்கிய மொபைல் செயலி மூலம் தகவல்களை பகிர்ந்து கொண்டுள்ளார். இவரிடம் 4 மொபைல்கள் மற்றும் 3 சிம் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவர்களை தவிர பஞ்சாபில் கசாலா என்ற பெண் மற்றும் யாமின் முகம்மது, சுக்பிரீத் சிங், கரன்பீர் சிங் என்ற 3 இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கனமழையால் பெங்களூரில் கடும் வெள்ளம்: பாதிக்கப்பட்ட மக்கள் படகுகள் மூலம் மீட்பு



பெங்களூரில் பெய்த கடும் கனமழையால் வீதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. கனமழை தொடர்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக தலைநகர் பெங்களூரில் கடந்த ஒரு வாரமாக மாலை நேரங்களில் கனமழை பெய்து வருகிறது. இந்த சூழலில் நேற்று முன் தினம் இரவு 9.30 மணிக்கு தொடங்கிய கனமழை அதிகாலை 5.30 மணி வரை விடிய விடிய கொட்டி தீர்த்தது. இதனால் சிவாஜிநகர், ஹென்னூர், கிருஷ்ணராஜாபுரம், கோரமங்களா உள்ளிட்ட இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சில்க் போர்ட், சாந்தி நகர், எலஹங்கா உள்ளிட்ட இடங்களில் வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் மழை வெள்ளம் புகுந்தது. வீடுகளில் இருந்த பொருள்களும், அடுக்குமாடி குடியிருப்பின் பார்க்கிங் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் நீரில் மூழ்கின.

பெங்களூரில் உள்ள ஹொரமாவு பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. இங்கு மீட்புப் படையினர் ரப்பர் படகு மூலம் பொதுமக்களை மீட்டனர்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் சித்தராமையா நேற்று மாலை பார்வையிட்டார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு மாநில அரசு அதிகாரிகளுக்கும், மாநகராட்சி அதிகாரிகளுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# அமெரிக்காவில் சூறாவளி தாக்கியதில் 28 பேர் பலி





அமெரிக்காவின் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களான கென்டக்கி, மிசோரி, விர்ஜீனியாவை அடுத்தடுத்து கடுமையான சூறாவளி தாக்கியதில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூறாவளியினால் கென்டக்கி மாகாணமே கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அப்பகுதியில் மாத்திரம் ஒரு தீயணைப்பு வீரர் உட்பட 19 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சூறாவளியில் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்ததுடன் வாகனங்கள் பலவும் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிசோரியின் செயின்ட் லூயிஸ் பகுதியில் மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசியுள்ளதோடு கனமழை மற்றும் புழுதிப் புயலும் வீசியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அப் பகுதி வாழ் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆயிரக்கணக்கான வீடுகள், வணிக நிறுவனங்கள் மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளன எனவும் போக்குவரத்துபாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமெரிக்கா முழுவதும் சில தினங்களுக்கு இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என்றும், சூறாவளி வீசும் என்றும் வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

இதேவேளை டெக்சாஸ் மற்றும் அர்கான்சாஸ் பகுதிகளுக்கும் சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தை உடனடியாக தொடங்கும்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

ரஷ்யாவும் உக்ரைனும் போர் நிறுத்தம் மற்றும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் இடம்பெற்ற இரண்டு மணி நேர தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையில் அமைதிக்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் வெளியிட்ட பதிவில்,

“ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் எனது இரண்டு மணி நேர உரையாடலை நிறைவு செய்தேன். அது மிகவும் சிறப்பாக நடந்தது என நான் நம்புகிறேன். ரஷ்யாவும் உக்ரைனும் உடனடியாக போர் நிறுத்தம் தொடர்பாக, இன்னும் முக்கியமாக, போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க உள்ளனர். அதற்கான நிபந்தனைகள் குறித்து இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இந்த ரத்தக்களரியான பேரழிவு முடிந்ததும், அமெரிக்காவுடன் பெரிய அளவிலான வர்த்தகம் செய்ய ரஷ்யா விரும்புகிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ரஷ்யாவுக்கு மிகப் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு மற்றும் வளத்தை உருவாக்க மிகப் பெரிய வாய்ப்பு உள்ளது. அதன் ஆற்றல் அளவில்லாதது. அதேபோல், உக்ரைனும் தனது நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் செயல்பாட்டில், வர்த்தகத்தில் பெரும் பயனாளியாக இருக்க முடியும். ரஷ்யாவுக்கு உக்ரைனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் உடனடியாகத் தொடங்கும்.

புடினுடனான அழைப்புக்குப் பிறகு, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோன், இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, ஜெர்மனி ஜனாதிபதி பிரீட்ரிக் மெர்ஸ், பின்லாந்து ஜனாதிபதி அலெக்சாண்டர் ஸ்டப் ஆகியோருக்கு நான் தகவல் தெரிவித்துள்ளேன். போப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாத்திகன், இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பதாகக் கூறியுள்ளது. செயல்முறை தொடங்கட்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், எதிர்காலத்தில் ஒரு சாத்தியமான சமாதான ஒப்பந்தம் குறித்து உக்ரைனுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 20/05/2025

## டொரொன்டோவில் வீட்டு வாடகை சரிவு

டொரொன்டோவில் கடந்த சில மாதங்களாக வீட்டு வாடகை சந்தை மெதுவாகவே சரிவடைந்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் 02



# ராஜபக்ஷக்கள் இழைத்த குற்றங்களுக்கு பொறுப்புக் கூறச் செய்யப்படவேண்டும்

## பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் அறிக்கை

ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்த குற்றவாளிகள் ஈழத்தமிழர்களுக்கு இழைத்த குற்றங்களுக்கு பொறுப்புக் கூறச்செய்யப்படும் ஒரு நாளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், 03

## வெளிநாட்டு மாணவர்களுக்கு உணவு கிடையாது:

# உணவு வங்கிகளின் முடிவால் சர்வதேச மாணவர்கள் தவிப்பு

சர்வதேச மாணவர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் முடிவொன்றை சமீபத்தில் கனேடிய உணவு வங்கிகள் எடுத்துள்ளன.

இனி, கனேடிய குடிமக்களுக்கும், நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்றவர்களுக்கும் மட்டுமே உணவு வழங்குவது என உணவு வங்கிகள் முடிவு செய்துள்ளன.

கனடாவுக்கு கல்வி கற்க வரும் மாணவர்கள், தங்கள் செலவுக்கு போதுமான பணம் வைத்திருக்கவேண்டும் என விதி உள்ளது.

அப்படியிருக்கும் நிலையில், தங்கள் உணவு போன்ற விடயங்களை 03





# காசா விடயத்தில் இஸ்ரேலுக்கு பிரான்ஸ், கனடா எச்சரிக்கை

காசாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை மிகவும் மோசமாக விரிவுபடுத்தினால், உறுதியான நடவடிக்கைகளை எடுப்போம் என்று இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் கனடா ஆகியவை எச்சரித்துள்ளன.

மேலும், இங்கிலாந்து பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர், பிரெஞ்சு மற்றும் கனேடிய தலைவர்களுடன் சேர்ந்து இஸ்ரேலிய அரசாங்கத்தை அதன் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த மற்றும் உடனடியாக மனிதாபிமான உதவிகளை காசாவிற்குள் நுழைய அனுமதிக்கவும் அழைப்பு விடுத்தார்.

கடந்த மார்ச் 2 முதல் காசாவிற்குள் உணவு, எரிபொருள் அல்லது மருந்து எதுவும் அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலைமை பாலஸ்தீன மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் சபை முன்னர் விவரித்தது.

அதேநேரம், சர் கெய்ர், இமானுவேல் மேக்ரோன் மற்றும் மார்க் கார்னி ஆகியோர், 2023 ஒக்டோபர் 7 அன்று தெற்கு இஸ்ரேல் மீதான கொடூரமான தாக்குதலில் பிடிபட்ட மீதமுள்ள பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்கவும் ஹமாஸுக்கு அழைப்பு விடுத்தனர்.

ஹமாஸால் நடத்தப்படும் காசாவின் சுகாதார அமைச்சகம், இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையின் போது 53,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என கூறுகிறது.

இந்த நிலையில், இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் கனடாவின் அறிக்கை, போர்நிறுத்தத்திற்கான ஆதரவையும், இஸ்ரேலுடன் இணைந்து இருக்கும் ஒரு சுதந்திர பாலஸ்தீன அரசை முன்மொழியும் இரு நாடு தீர்வை செயல்படுத்துவதையும் மீண்டும் வலியுறுத்தியது.




## டொரொன்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், தற்போது அதில் சிறிய நிவாரண அறிகுறிகள் தோன்றத் தொடங்கியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில், Rentals.ca மற்றும் Urbanation ஆகிய நிறுவனங்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

குறித்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“டொரொன்டோவில் கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிட்டால் வீட்டு வாடகைச் செலவுகள் சராசரியாக ஏழு வீதம் குறைந்துள்ளன.

இது தொடர்ந்து 14 ஆவது மாதமாக வாடகை விலைகள் ஆண்டுக்கு ஆண்டாக குறைவடையும் நிலையை காட்டுகிறது.

தற்போது, நகரில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் சராசரி வாடகை 2,589 டொலராக காணப்படுகின்றது என்பதுடன், இது கடந்த 32 மாதங்களில் பதிவான மிகவும் குறைந்த தொகையாகும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சர்வதேச மாணவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் குறைவு

கனடா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் சர்வதேச மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் குறைவு என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொழிலதிபர் ஒருவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார் என ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில், கோடிக்கணக்கில் பணம் செலவு இந்த நாடுகளுக்கு கல்வி கற்க வரும் முன் யோசித்து முடிவெடுக்குமாறு அவர் வலியுருத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், “அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியாவில் சர்வதேச மாணவர்களுக்கு வேலை இல்லை.

தேனிலவு காலகட்டம் முடிவடைந்து விட்டது, கோடிக்கணக்கில் செலவு செய்து பிள்ளைகளை கல்வி கற்க அனுப்புவதற்கு முன் பெற்றோர் முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து முடிவெடுக்க வேண்டும்” என அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நாடுகள், சர்வதேச மாணவர்கள் கல்வி கற்றபின் அந்நாடுகளில் தங்கி வேலை செய்வதை கடினமாக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

இவ்வாறான சூழலில் தொழிலாதிபர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“தமிழ் மக்களிற்கு எதிராக இலங்கை அரசாங்கம்பாரியஇனப்படுகொலையில் ஈடுபட்ட யுத்தத்தின் 16 ஆவது வருட நிறைவை நினைவுகூருகின்றோம்.

உயிர் தப்பிய பலர் கனடாவிற்கு பாதுகாப்பிற்காக தப்பியோடிவந்தனர். நாங்கள் இழக்கப்பட்ட உயிர்களை சிதறடிக்கப்பட்ட குடும்பங்களை, நிரந்தரமாக பாதிக்கப்பட்ட சமூகங்களை நினைவுகூருகின்றோம்.

இந்த வலியின் சுமையையும் அன்புக்குரியவர்களின் நினைவுகளையும் தொடர்ந்து சுமக்கும் பிரம்டன் மற்றும் கனடா தமிழ் சமூகத்துடன் உறுதியாக இணைந்திருக்கின்றோம்.

பிரம்டன் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியின் இருப்பிடம் என்பதால் இந்த வருடம் பிரம்டனிற்கு மிகவும் விசேடமானது.

இது ஒரு சக்திவாய்ந்த நினைவுச்சின்னமாகும். இந்த நினைவுச்சின்னம் கடந்த காலத்தை நினைவூட்டுவதாகவும், உண்மை பொறுப்புக்கூறல் மற்றும் அமைதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட எதிர்காலத்திற்கான அழைப்பாகவும் விளங்குகின்றது.

அதேவேளை ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தகுற்றவாளிகள் இறுதியாக மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிற்காக பொறுப்புக்கூறச்செய்யப்படும் ஒரு நாளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நீதிக்காக, ஒற்றுமையுடன் ஒன்றாக நிற்பதற்கும் எங்களை அர்ப்பணிப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களை கௌரவிப்போம்.” என குறிப்பிட்டுள்ளார்.

## உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களேதானே கவனித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்கின்றன உணவு வங்கிகள்.

ஆகவே, இனி சர்வதேச மாணவர்களுக்கு உணவளிப்பதில்லை என உணவு வங்கிகள் முடிவு செய்துள்ளன.

என்னிடம் கொஞ்சம் பணம் உள்ளது. ஆனால், இங்கு உணவின் விலை மிக அதிகமாக உள்ளது என்கிறார் ஒரு மாணவர்.

நான் கடன் வாங்கித்தான் கனடாவுக்கு படிக்கவந்தேன். இங்கு விலைவாசியும் அதிகமாக உள்ளது. பகுதி நேர வேலைகள் கிடைப்பதும் இப்போது கடினமாகிவிட்டது என்கிறார் மற்றொரு மாணவர்.

முன்பு உணவுத் தேவைகளுக்காக உணவு வங்கிகளை சார்ந்திருந்த மாணவர்கள் சிலர், இப்போது தாங்கள் சில வேளை உணவைத் தவிர்ப்பதாகக் கூறுகிறார்கள்.

அத்துடன், முன்பு இரண்டு, பகுதி நேர வேலைகள் செய்து செலவுகளை சமாளித்துவந்தோம்.

இப்போது, உள்ளூர் மக்களுக்கு வேலை வேண்டும் என்று வேலை வழங்குவோர் கூறுவதால் வேலைக்கும் சிக்கல் ஏற்பட்டு விட்டது என்கிறார் ஒரு மாணவர்.

இந்நிலையில், கனடா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவில் சர்வதேச மாணவர்களுக்கு வேலை இல்லை.

ஆகவே, பெற்றோர் எக்கச்சக்கமாக பணம் செலவு செய்து அங்கெல்லாம் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பும் முன், ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுங்கள் என தொழிலதிபர் ஒருவர் சமீபத்தில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.